மவ்லவி. அப்துல் வதூத் ஜிப்ரீ



மாநபி கூறும் மண்ணறை வாழ்க்கை

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

மாநபி சஹறும் மண்ணறை வாழ்க்கை

ஆசிரியர்
மவ்லவி M.S. அப்துல் வதூத் ஜிப்ரி
(இலங்கை)

வெளியீடு
முனீரா பதிப்பகம்
248, தம்புச் செட்டித் தெரு
சென்னை - 600 001.

புத்தக விவரத் தொகுப்பு

நூலின் பெயர்	:	மாநபி கூறும் மண்ணறை வாழ்க்கை
ஆசிரியர்	:	மவ்லவி M.S. அப்துல் வதூத் ஜிப்ரி
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	எட்டாம் பதிப்பு
வெளியீட்டு நாள்	:	மார்ச் 2011
நூலின் அளவு	:	1/8 கிரவுன்
பக்கங்கள்	:	48
பிரதிகள்	:	2000
அச்சிட்டோர்	:	A.M. பிரிண்டிங் ஏஜென்ஸி சென்னை–1. போன் – 99411 75303
வெளியீடு	:	முனீரா பதிப்பகம்
கிடைக்குமிடம்	:	சாஜிதா புக் சென்டர் 248, தம்புச் செட்டி தெரு முதல்மாடி, சென்னை–1 போன் – 25224821

விலை : ரூ. 12.00

பதிப்புரை

ஒழுக்கச் சீரழிவை நோக்கி மின்னல் வேகத்தில் சென்று கொண்டிருக்கும் மனித சமுதாயத்தில் குர்ஆனையும், சுன்னாவையும் ஏற்ற முஸ்லிம்களில் சிலரும் கூட பண்பாடற்ற கலாச்சாரத்தில் மூழ்கிக் கிடப்பதைப் பார்த்து வருகிறோம், குர்ஆனையும், நபி வழியையும் ஏற்று அதன்படி முழுமையாக தமது வாழ்க்கையை அமைத்தால் மட்டுமே இம்மை-மறுமை வாழ்க்கை சிறப்பாக அமையும் என்பதை பறைசாற்றக் கூடிய பல நூல்களை எமது வெளியீட்டகம் மூலம் வெளியிட்டு வருகிறோம், (அல்ஹம்துலில்லாஹ்)

அந்த வரிசையில் மரணத்திற்குப் பின் ஒரு வாழ்க்கை உண்டு, அதுதான் மண்ணறை வாழ்க்கை, அந்த வாழ்க்கையில் ஒருவரது நிலை எப்படி இருக்கும் என்பதைப் பற்றி திருகுர்ஆனும், நபிமொழிகளும் தெளிவான விளக்கங்களை தந்துள்ளன,

மண்ணறை வாழ்வு இப்புவி உலக வாழ்வின் முடிவு எனினும் அது மறுமை வாழ்வின் ஆரம்பம் என்பதை மறந்து விடக் கூடாது, மறுமை வாழ்வுக்கான அழைப்பு அல்லாஹ்விடமிருந்து வரும் வரை ஒவ்வொருவரும் மண்ணறை வாழ்வை சுவைத்தேத் தீர வேண்டும், அப்போது அவரது வாழ்வு எப்படியிருக்கும் என்பதை இந்நூல் அழகாக படம் பிடித்துக் காட்டுகிறது,

மண்ணறை வாழ்வு மறுமை வாழ்வின் நிழலாக ஒத்திகையாக அமையும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும், எனவே ஒவ்வொரு மனிதனும் குறிப்பாக ஒவ்வொரு

முஸ்லிமும்- ஓரிறைக் கொள்கையைக் கொண்ட இஸ்லாம் என்ற அணைப்பில் ஒன்றுபட்டிருக்க வேண்டும் இக்கொள்கைக்கு மாற்றமான மடமைத்தனத் (ஜாஹிலிய்யத்)திலிருந்து முழுமையாக விலகிவிட வேண்டும்,அதுவே அழகிய மண்ணறை வாழ்வை அமைத்துத் தரும் நிரந்தர மறுமை வாழ்வின் சுகத்திற்கு அடிகோலும்,

'மாநபி கூறும் மண்ணறை வாழ்க்கை' என்ற இந்நூலை மவ்லவி **M.S.** அப்துல் வதூத்ஜிப்ரி அவர்கள் எழுத, இலங்கை இஸ்லாமியர் தஃவா அமைப்பு ஜப்பான் 1994ல் முதல் பதிப்பாக வெளியிட்டது, பிறகு இரண்டாம், மூன்றாம் பதிப்புகளை சென்னை புர்கான் பப்ளிகேஷன் டிரஸ்ட் வெளியிட்டது, இந்த நேரத்தில் இந்தியா வந்த மவ்லவி அப்துல் வதூத் ஜிப்ரி அவர்கள் சில திருத்தம் செய்து வெளியிட நமக்கு அனுமதி தந்தார்கள், தற்சமயம் முனீரா பதிப்பகம் மூலம் இந்நூலை வெளியிடுவதில் மகிழ்வடைகிறோம்,

தூய இஸ்லாத்தை தூய வடிவில் விளங்கி செயல்பட துடிக்கும் இஸ்லாமிய சகோதர, சகோதரிகள் இந்நூல் மூலம் நல்ல பயனடைவார்கள் என நம்புகிறோம், இந்நூலை எழுதி வெளியிட அனுமதி தந்த மவ்லவி **M.S.** அப்துல் வதூத்ஜிப்ரி அவர்களுக்கும், அழகிய முறையில் அச்சிட்டு தந்த அச்சகத்தாருக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்,

அல்லாஹ் நம்மனைவருக்கும் நேர்வழி காட்ட போதுமானவன், ஆமீன்

முனீரா பதிப்பகம்

சென்னை-1

முன்னுரை

இம்மைக்கும் மறுமைக்கும் இடைப்பட்டதொரு வாழ்க்கை உண்டு. அது தான் கப்ர் வாழ்க்கை. அதை அல்குர்ஆன் 'பர்ஸக்' வாழ்க்கை என்று கூறுகின்றது. அந்த வாழ்க்கை மறுமை நாள் வரை உண்டு. நல்லவர்கள் அங்கு இன்பத்தோடும்தீயவர்கள் துன்பத்தோடும் வாழ்வார்கள். முஸ்லிம்களில் கூட அந்த வாழ்க்கையைப் பற்றி ஐயப் படுகின்றவர்கள் இந்த நவீன காலத்தில் இருக்கின்றனர்.

'வஹீ' மூலம் அருளப் பட்ட அல்குர் ஆனை ஓதிக் காட்டி அதன்படி மனித வாழ்க்கையை நெறிப் படுத்திய நபி (ஸல்) அவர்களே கப்ர் வாழ்க்கை பற்றியும் கூறியுள்ளார்கள். அங்கு நல்லவர்கள் அடையவிருக்கும் இன்பங்களையும் தீயவர்கள் அடையவிருக்கும் துன்பங்களையும் அல்லாஹ்விடமிருந்து அருளப்பட்ட வஹீ மூலம் விளக்கிக் கூறினார்கள்.

ஒரு ஜனாஸா தூக்கிச் செல்லப்படும் போது-கப்ரில் இறக்கப்பட்டுக் கொண்டிருந்த போது - அடக்கம் செய்யப்பட்டுச் சில காலம் கழிந்த பின்பு - இப்படியான பல சந்தர்ப்பங்களில் நடைபெற்ற வேதனைகள் நபியவர்களுக்குக் காட்டப்படடு, அவர்கள் தமது தோழர்களுக்கு அறிவித்துக் கொடுத்தார்கள்.

அந்த வகையில் இந்நூல் மரணவேளையிலும் கப்ரிலும் நடைபெறும் இன்ப துன்பங்களைத் தெளிவு படுத்தக் கூடியதாகவும் இறையச்சத்தை அதிகப்படுத்தக் கூடிய தாகவும் பாவச் சிந்தனைகளை அகற்றக் கூடியதாகவும் அமைந்துள்ளது என நம்புகிறேன். நமது கப்ருகளில் வேதனை நீங்கி இன்பம் பெருக் கூடிய நல் வாழ்வை அல்லாஹ் அருள்வானாக!

அப்துல் வதூத் இப்னு முஹம்மத் ஸாலிஹ்

பொருளடக்கம்

இம்மைக்கும் மறுமைக்கும் இடைப்பட்ட பர்ஸகுடைய வாழ்வு

உலகில் பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனும் மரணத்தைத் தழுவியே ஆக வேண்டும். ஒரு மூமினுடைய விசுவாசத்தில் மறுமையை விசுவாசிப்பது மிக முக்கியமான ஓர் அம்சமாகும். மறுமையின் மீது நம்பிக்கை இல்லாத நிலையில் எவ்வளவு நல்ல செயல்கள் புரிந்த போதிலும் அவை அனைத்தும் பயனற்றதாகவே ஆகிவிடும்.

உலகில் வாழ்கின்ற நல்லவர்களாயினும் தீயவர்களாயினும் அனைவரும் தமது மரணத்திற்குப் பின்பு கப்ர் வாழ்வை அனுபவித்தே ஆகவேண்டும். கப்ர் வாழ்வை பர்ஸகின் வாழ்வென்று அல்குர்ஆன் கூறுகின்றது.,

حَتّٰى اِذَا جَاءَ اَحَدَهُمُ الْمَوْتُ قَالَ رَبِّ ارْجِعُوْنِ لَعَلِّيْ اَعْمَلُ

صَالِحًا فِيْمَا تَرَكْتُ كَلاَّ اِنَّهَا كَلِمَةٌ هُوَ قَائِلُهَا وَمِنْ وَرَائِهِمْ

بَرْزَخٌ اِلٰى يَوْمٍ يُبْعَثُوْنَ.

“(நிராகரித்துக் கொண்டிருக்கும்) அவர்களில் எவனுக்கேனும் மரணம் வந்து விட்டாலோ, (அவன் தன் இறைவனை நோக்கி) என் இறைவனே! என்னை (உலகுக்கு)த் திருப்பி அனுப்பி விடு. நான் விட்டு வந்த அ(ந்த உலகத்)தில் (இனி மேல்) நற்காரியங்களையே செய்து கொண்டிருப்பேன்” என்று கூறுவான். (எனினும் அது நடக்கக் கூடிய காரியம்) அன்று. (இத்தகைய சந்தர்ப்பத்தில்) அவன் கூறக் கூடியது

வெறும் வார்த்தையே (அன்றிவேறில்லை) அவர்களுக்குப் பின் அதில் (உயிர் கொடுத்து) எழுப்பப் படும் நாள் வரையில் ஒரு BARZAKH பர்ஸக் (அரண்) உண்டு.

திருக்குர்ஆன் 23:99,100

பர்ஸக் BARZAKH என்பது இம்மைக்கும் மறுமைக்கும் இடைப்பட்ட ஓர் உலகமாகும். இம்மை ஓர் உலகம் என்பது எப்படி உண்மையோ அவ்வாறே பர்ஸக் என்பதும் ஓர் உலகமாகும். இம்மையில் வாழ்வது போன்றதொரு வாழ்க்கை பர்ஸகிலும் உண்டு.

கப்ரில் வைக்கப் படுகின்ற ஒவ்வொருவரும் 'முன்கர்' 'நகீர்' என்ற இரண்டு மலக்குகள் மூலம் விசாரிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய விசாரணையின் பின்னர் நல்லவர்களுடைய கப்ர் பசுமையுள்ள ஓர் இடமாக ஆக்கப் பட்டு எழுபது முழம் விசாலமாக்கப்படும். மறுமை நாள் வரை அவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பார்கள்.

மரண வேளையில் இன்பமும் துன்பமும்

தீயவர்கள் மிகக் கடுமையாக விசாரிக்கப்படுவார்கள். அப்போது அவர்கள் எந்த ஒரு கேள்விக்கும் பதிலளிக்க முடியாமல் திணறுவார்கள். பலதரப்பட்ட வேதனைகளை அவர்களுக்கு அளிக்குமாறு அல்லாஹ் மலக்குகளுக்கு உத்தரவிடுவான். இரும்புச் சம்மட்டிகளால் அவர்கள் அடிக்கப்படுவார்கள். அவர்களுடைய விலா எலும்புகள் ஒன்றுடனொன்று பின்னிக்கொள்ளுமளவு கப்று அவர்களை நெருக்கும். மரண வேளையில் நல்லவர் தீயவர் இருவருடைய நிலை பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் செய்த உபதேசமொன்று பின்வருமாறு அமைந்துள்ளது.

“மதீனாவாசி ஒருவருடைய ஜனாஸாவைப் பின் தொடர்ந்து நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சென்றார்கள். ஜனாஸா அடக்கம் செய்யப்பட்டதும் நபியவர்கள் கப்ர் அருகில் அமர்ந்தார்கள். நாமும் அவர்களைச் சூழ அமர்ந்தோம். நபியவர்கள் சிறிய குச்சியொன்றினால் நிலத்தில் கீறிக் கொண்டிருந்து விட்டு திடீரென தமது தலையை உயர்த்தியவர்களாக “கப்ருடைய வேதனையை விட்டு அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடிக்கொள்ளுங்கள்” என்று மூன்று தடவை கூறினார்கள். பின்னர் மரணத்தறுவாயிலுள்ள ஒரு மூமினுடைய நிலை பற்றிக் கூறினார்கள்.

“மூமினான ஒரு அடியான் உலகத் தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டு மறுமையை நோக்கிக் கொண்டிருக்கையில் சூரிய ஒளிக்கொப்பான பிரகாசமுள்ள முகத்துடன் வானிலிருந்து சில மலக்குகள் அவனிடம் வருவார்கள். அவர்கள் தங்களுடன் சுவர்க்கத்துத் துணிகளையும் சுவர்க்கத்தின் நறுமணங்களையும் வைத்துக்கொண்டு அவனுடைய பார்வைக்கு எட்டும் தூரத்தில் நிற்பார்கள்.

அப்பொழுது உயிரைக் கைப்பற்றும் மலக்கு வந்து அவனருகில் அமர்வார். அவனை நோக்கி “நல்ல ஆத்மாவே ! நீ அல்லாஹ்வுடைய மன்னிப்பளவிலும் அவனுடைய பொருத்தத்தினளவிலும் இந்த உடலிலிருந்து வெளியேறி விடு” என்று கூறுவார். தோல் பையொன்றிலிருந்து (அதனை வளைத்தால்) நீர் வழிந்து விடுவது போன்று (அந்த ஆத்மா உடலிலிருந்து இலகுவாக) வெளியேறி விடும். அவர் அதனை எடுத்துச் செல்வார்.

அதனை அவர் எடுத்ததும் அருகிலுள்ள மலக்குகள், உடனே சுவர்க்கத்துத் துணியிலும் நறுமணத்திலும் அதனை வைத்து விடுவார்கள். அதிலிருந்து கஸ்தூரி வாடை வீசும். அந்த

மலக்குகள் அதனைச் சுமந்தவர்களாக முதலாவது வானத்தை நோக்கிச் சென்று வானத்தைத் திறந்து விடுமாறு அதிலுள்ள மலக்குகளிடம் கூறுவார்கள்.

வானத்து மலக்குகள் வந்தவர்களை நோக்கி உங்களுடன் இருப்பவர் யார் என வினவுவர். அவர் இன்னாருடைய மகன் இன்னார் என இவர்கள் பதிலளிப்பர். மீண்டும் அவர்கள் "அவரது நிலை என்ன?" என வினவுவர். அதற்கு இவர்கள் "அவர் ஸாலிஹான ஓர் அடியார்" என பதிலளிப்பர். அதனையடுத்து அம்மலக்குகள் வானத்தைத் திறந்து அந்த ஆத்மாவை வரவேற்பார்கள். ஒவ்வொரு வானத்திலும் இவ்விதமே வினாவும் விளக்கமும் நடைபெறும். ஏழாவது வானத்தைக் கடந்து சென்றதும், அல்லாஹ் ஆத்மாவைச் சுமந்து சென்ற மலக்குகளை நோக்கி, "எனது இந்த அடியானுடைய செயல்களை 'இல்லிய்யீனிலே (மூமின்களுடைய ரூஹுகள் இருக்குமிடம்) பதிந்து விட்டு (விசாரணைக்காக) பூமியிலுள்ள அவனது உடலில் அவனது ஆத்மாவை சேர்த்து விடுங்கள்" என்று கூறுவான்.

(அந்த மலக்குகள் அவ்விதமே செய்வார்கள்.) அப்போது அவரிடத்தில் (முன்கர் நகீர் என்ற) இரண்டு மலக்குகள் வந்து அவரை எழுந்திருக்கச் செய்து, அமர வைப்பார்கள். அவர்கள் அந்த அடியானை நோக்கி பின்வருமாறு கேள்விகள் கேட்பார்கள்.

கே : உனது இறைவன் யார்?

ப : எனது இறைவன் அல்லாஹ்.

கே : உனது மார்க்கம் என்ன?

ப : எனது மார்க்கம் இஸ்லாம்.

கே : உன்னிடத்தில் (மார்க்கத்தைப் போதிக்க) அனுப்பப் பட்டவர் யார்?

ப : அவர் அல்லாஹ்வுடைய ரஸுல்; முஹம்மத் (ஸல்)

கே : நீ அதனை எவ்வாறு அறிந்து கொண்டாய்?

ப : அல்லாஹ்வுடைய வேதத்தை ஓதினேன்; அதனை விசுவாசம் கொண்டேன்; அதனை உண்மைப் படுத்தினேன்.

"எனது அடியான் உண்மையுரைத்துவிட்டான். அவனுக்காகச் சுவர்க்கத்தின் விரிப்புகளை விரித்துவிடுங்கள். சுவர்க்கத்தின் ஒரு கதவை அவனுக்காக திறந்து விடுங்கள்" என்று கூறக்கூடிய ஓசையொன்று அப்பொழுது வானிலிருந்து வரும். அவனுடைய கண் பார்வை எட்டுமளவு அவனது கப்ர் விசாலமாக்கப்படும்.

அப்போது நறுமணம் கமழ அழகிய ஆடை அணிந்து வசீகரமான தோற்றத்துடன் ஒரு மனிதர் அவரிடத்தில் வருவார். அம்மனிதர் அவரை நோக்கி "உனக்கு வாக்களிக்கப்பட்ட - உன்னை மகிழ்வூட்டக்கூடிய - ஒரு நன்னாள் இதுவாகும்" என்று கூறுவார்.

அந்த மூமின் அம்மனிதரை நோக்கி "நீர் யார்?" என்று கேட்பார். அப்பொழுது அம்மனிதர் "நான் தான் (நீ உலகில் தேடி வைத்த) உனது 'ஸாலிஹான அமல்கள்' (அல்லாஹ் இந்த உருவத்தில் உன்னிடம் என்னை அனுப்பி வைத்தான்)" என்று கூறுவார். அப்பொழுது அந்த மூமின், "அல்லாஹ்வே! எனது குடும்பத்துடனும் நான் தேடி வைத்திருந்த எனது அமல் களுடனும் சென்றடைய மறுமையை உண்டாக்குவாயாக!" என்று கூறுவார். மரண வேளையிலிருந்து கப்ர் வரை ஒரு மு.்.மினுடைய நிலை இதுவாகும்.

நிராகரிக்கக்கூடியவன் மரண வேளைளை நெருங்கி விட்டால் கருநிற (விகாரமான) முகத்துடன் சில மலக்குகள்

வந்து அவனது கண் பார்வை எட்டும் தூரத்தில் அமர்ந்து விடுவார்கள். அவர்களிடத்தில் ஒரு கம்பளித் துணி இருக்கும்.

அப்பொழுது உயிரைக் கைப்பற்றக் கூடிய மலக்கு வந்து அவனருகில் அமர்வார். அவர் அவனை நோக்கி, “கெட்ட ஆத்மாவே! அல்லாஹ்வின் புறத்திலிருந்து இழிவின் பாலும், அவனுடைய கோபத்தின் பாலும் நீ வெளியேறி வா” என்று கூறுவார்.

அப்பொழுது அவ்வுயிர் ஒளிந்துகொள்வதற்காக உடல் முழுவதும் ஓட ஆரம்பித்துவிடும். உயிரைக் கைப்பற்றக் கூடிய மலக்கு அவனுடைய உடலிலிருந்து பலவந்தமாக உயிரைப் பிடுங்கி எடுப்பார். நனைந்த கம்பளியிலிருந்து ஒரு மயிரைப் பிடுங்குவது எவ்வளவு கடினமாகுமோ, அதனை விடக் கடினமாக அந்த உயிரைப் பிடுங்கி எடுப்பார்.

பின்னர், அது அந்தக் கம்பளியில் சுருட்டப்பட்டு முதலாவது வானத்துக்குக் கொண்டு செல்லப்படும். ஒரு பிணத்தின் வாடையை விட அதிலிருந்து துர்வாடை வீசும். முதலாவது வானத்திலுள்ள மலக்குகள் “இந்தத் துர்வாடை என்ன?” என்று கேட்பார்கள். அப்பொழுது அந்த மலக்குகள், “உலகில் வாழ்ந்தவர்களில் மிகக் கெட்டவனான ஒருவனுடைய உயிர் கொண்டு வரப்பட்டிருக்கிறது” என்று கூறுவார்கள்.

அதனைத் தொடர்ந்து வானத்தைத் திறந்து விடுமாறு ரூஹைச் சுமந்து வந்த மலக்குகள் கூறுவார்கள். “அவனுக்காக வானம் திறக்கப்படமாட்டாது”. நபியவர்கள் இவ்வாறு கூறி விட்டுத் தொடர்ந்து பின்வரும் அல்குர்ஆன் வசனத்தை ஓதினார்கள்.

إِنَّ الَّذِيْنَ كَذَّبُوْا بِآيَاتِنَا وَاسْتَكْبَرُوْا عَنْهَا لاَ تُفَتَّحُ لَهُمْ اَبْوَابُ

السَّمَاءِ وَلَا يَدْخُلُوْنَ الْجَنَّةَ حَتّٰى يَلِجَ الْجَمَلُ فِىْ سَمِّ الْخِيَاطِ وَكَذٰلِكَ نَجْزِى الْمُجْرِمِيْنَ.

'நிச்சயமாக எவர், நம்முடைய வசனங்களைப் பொய்யாக்கி, அவற்றைப் புறக்கணிப்பதைப் பெருமையாகக் கொண்டாரோ அவருக்கு, (அல்லாஹ்வின் அருளுக்குரிய) வானத்தின் வாயில்கள் திறக்கப்பட மாட்டாது. ஊசியின் காதில் ஒட்டகம் நுழையும் வரையில், அவர்கள் சுவர்க்கத்தில் நுழையவே மாட்டார்கள். குற்றவாளிகளுக்கு இவ்வாறே நாம் கூலி கொடுப்போம்'.

திருக்குர்ஆன் 7 :40

பின்னர் அல்லாஹ், உயிரைச் சுமந்து வந்த மலக்குகளை நோக்கி அவனுடைய செயல்களை பூமியின் அடிப் பாகத்திலுள்ள 'ஸிஜ்ஜீன்'[1] என்ற இடத்தில் பதியுமாறு உத்தரவிடுவான். பின்னர் அந்த உயிர் முதலாவது வானத்திலிருந்து ஸிஜ்ஜீன் என்ற இடத்துக்கு எறியப்படும்" என்று கூறிவிட்டு மீண்டும் பின்வரும் அல்குர்ஆன் வசனத்தை நபியவர்கள் ஓதினார்கள்.

مَنْ يُشْرِكْ بِاللّٰهِ فَكَاَنَّمَا خَرَّ مِنَ السَّمَاءِ فَتَخْطَفُهُ الطَّيْرُ اَوْ تَهْوِي بِهِ الرِّيْحُ فِىْ مَكَانٍ سَحِيْقٍ.

---

[1] ஸிஜ்ஜீன் என்றால் தீயவர்களின் செயல்கள் பதியப்படும் இடமாகும்.

"அல்லாஹ்வுக்கு எதனையும் இணை வைக்காதீர்கள். யாரேனும் அல்லாஹ்வுக்கு இணை வைப்பாராயின் அவர் வானத்திலிருந்து விழுந்துவிட்டவரைப் போன்று ஆகி விடுகின்றார். (காகம், கழுகு போன்ற) பறவைகள் இராய்ந்து கொண்டு சென்றதைப் போலவோ அல்லது வெகு தூரத்தில் காற்று அடித்துக் கொண்டு சென்றதைப் போலவோ ஆகிவிடுவார்."

திருக்குர்ஆன் 22 : 31

ஸிஜ்ஜீனிலே அவனுடைய செயல்கள் பதியப்பட்ட பின்னர் அவனது உயிர் அவனுடைய உடலில் ஊதப்படும். அதனைத் தொடர்ந்து இரண்டு மலக்குகள் அவனிடம் வந்து அவனை எழுப்பி, அமரச் செய்வார்கள். அவனிடத்தில் பின் வருமாறு கேள்விகள் கேட்பார்கள்.

கே : உனது இறைவன் யார்?
ப : ஆ...ஆ.... எனக்குத் தெரியாது.
கே : உனது மார்க்கம் என்ன?
ப : ஆ...ஆ... எனக்குத் தெரியாது.
கே : உன்னிடத்தில் (மார்க்கத்தைப் போதிக்க) அனுப்பப் பட்ட மனிதர் யார்?
ப : ஆ...ஆ... எனக்குத் தெரியாது.

(மேற்சென்னவாறு அனைத்துக் கேள்விகளுக்கும் தனக்குத் தெரியாது என்றே பதில் சொல்வான்.) "இவன் பொய் சொல்லுகிறான்; நரகத்தின் விரிப்புக்களை இவனுக்காக (கப்ரில்) விரித்து விடுங்கள்; நரகத்தின் பக்கமிருந்து ஒரு கதவை இவனுக்காக திறந்து விடுங்கள்" என்று கூறக்கூடிய ஓசையொன்று அப்பொழுது வானிலிருந்து வரும்.

நரகிலிருந்து உஷ்ணமும், விஷக்காற்றும் அவனுடைய கப்ருக்குள் வீசும். அதனால் காற்று வீசும் போதெல்லாம் அவன்

மயக்கமுற்று விழுவான். அவனுடைய வலது இடது விலா எலும்புகள் ஒன்றுடன் ஒன்று பின்னி விடுமளவு கப்ர் அவனை நெருக்கும். அழுக்கான ஆடையும் அவலட்சண முகமும் கொண்ட துர்வாடை வீசக்கூடிய ஒரு மனிதன் அவனிடம் வருவான். அம்மனிதன் அவனை நோக்கி, "உனக்கு வாக்களிக்கப்பட்ட, கேடு உண்டாக்கக்கூடிய இந்நாளை உனக்கு நான் (நினைவூட்டி) நன்மாராயம் கூறுகிறேன்" என்பான். அப்பொழுது அவன். "அவலட்சமான இந்நிலையில் இருக்கும் நீர் யார்?" என்று அம்மனிதனை நோக்கிக் கேட்பான் . "நான் தான் உனது தீய செயல்கள்" என்று அவன் பதிலளிப்பான். அதனைத் தொடர்ந்து "இறைவனே! நீ மறுமையை உண்டாக்காதே!" என்று புலம்ப ஆரம்பித்து விடுவான்.

அறிவிப்பவர் : பராஉ இப்னு ஆஸிப் (ரலி)
நூல்கள் : அஹ்மத், அபூதாவூத், ஹாகிம்

மனிதன் செய்கின்ற தப்புத் தவறுகளை உணர்ந்து அல்லாஹ்விடம் கெஞ்சி பாவமன்னிப்புத் தேடப் பல சந்தர்ப்பங்களை அல்லாஹ் வழங்குகிறான். அவ்வாறான அனைத்துச் சந்தர்ப்பங்களையும் அலட்சியப் படுத்தி விட்டு மரணத்தறுவாயிலோ அதற்குப் பின்னாலோ புலம்புவதில் என்ன தான் பயன் உண்டு? அல்லாஹ் வழங்குகின்ற சந்தர்ப்பங்களைப் பற்றிய அறிவிப்பொன்று பின்வருமாறு அமைந்துள்ளது.

மனிதனுக்கு, அவனுடைய வயது அறுபதாகின்ற வரை அல்லாஹ் அவனுடைய ஆயுளைப் பிற்படுத்தி வைத்து (பாவமன்னிப்புத் தேட) சந்தர்ப்பத்தை வழங்குகிறான் என நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

ஆதாரம் : புகாரி

அதிகமானவர்களின் ஆயுள் அறுபதாக இருக்கின்ற படியால்நபியவர்கள் அறுபதென்று பொதுப்படையாகக்

கூறியுள்ளார்கள். ஒரு மனிதனுடைய மரணத்துக்குப் பின்னால் அவனை விட்டுப் பிரிந்து விடுவது எது? அவனுடனே ஒட்டிக் கொள்வது எது? என்பதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விளக்குகின்ற போது,

"ஒரு மையித்தை மூன்று பேர் தொடர்ந்து செல்கிறார்கள். 1. அவனது குடும்பம். 2. அவனது சொத்து 3. அவனுடைய செயல்கள். இரண்டு (அவனைவிட்டு) திரும்பி விடுகின்றன. ஒன்று (அவனுடன்) தங்கி விடுகிறது. திரும்பி விடுபவை அவனது குடும்பமும் பொருள்களுமாகும். அவனது செயல்கள் மட்டுமே அவனுடன் தங்கி விடுகின்றது" என்று கூறினார்கள்.

ஆதாரம் : புகாரி, முஸ்லிம்.

பாவிகளுடைய ஸக்ராத்தின் போது அவர்களது முகங்களிலும் முதுகுகளிலும் மலக்குகள் அடிக்கிறார்கள்

மனிதன் பிறக்கின்ற போது சிரமத்துடன் பிறக்கிறான். அதனைத் தொடர்ந்து வாழ்க்கையில் அவன் சுகமாகவும், சுதந்திரமாகவும் வாழ்கிறான். அந்த வாழ்க்கையை இஸ்லாமிய வட்டத்துக்குள் அமைத்துக் கொள்ளாதவன் இறப்பின் போதும் கஷ்டத்தை அனுபவிக்கிறான். இறப்புக்குப் பின்னால் கப்ரிலும் கூட கஷ்டத்தையே அனுபவிக்கிறான். பாவி ஒருவனுக்கு மரண தருவாயில் ஏற்படக்கூடிய துன்பங்களை அல்லாஹ் தனது திருமறையில் சொல்லுகின்ற போது.

فَكَيْفَ اِذَا تَوَفَّتْهُمُ الْمَلٰٓئِكَةُ يَضْرِبُوْنَ وُجُوْهَهُمْ وَاَدْبَارَهُمْ

ذٰلِكَ بِاَنَّهُمُ اتَّبَعُوْا مَآاَسْخَطَ اللّٰهَ وَكَرِهُوْا رِضْوَانَهٗ فَاَحْبَطَ

اَعْمَالَهُمْ.

“அவர்கள் (மரணிக்கும் பொழுது அவர்களுடைய) உயிரைக் கைப்பற்றும் மலக்குகள் அவர்களுடைய முகங்களிலும் முதுகுகளிலும் (பலமாக அடிப்பார்கள் அவர்கள்.) அடிக்கும் பொழுது (இவர்களுடைய நிலைமை) எவ்வாறிக்கும்? ஏனென்றால் அல்லாஹ்வுக்குக் கோப மூட்டக் கூடியவை களையே அவர்கள் பின்பற்றி அவனுக்குத் திருப்தி தரக் கூடியவைகளை வெறுத்து வந்தனர். ஆதலால் இவர்களுடைய நன்மையான செயல்களை அல்லாஹ் அழித்து விட்டான்.

(திருக்குர்ஆன் 47 : 27, 28)

அல்லாஹ்வுடைய விருப்பத்துக்கு மாறாக, மனம் போன போக்கில் உலக வாழ்வை அமைத்துக் கொள்வோருடைய மரண வேளை எவ்வாறு அமைகின்றது என்பதை மேற்கண்ட மறை வசனங்கள் தெளிவு படுத்துகின்றன. மலக்குகள் அடித்துத் துன்புறுத்தி, பலவந்தமாக உயிரைக் கைப்பற்றுவார்கள் என்று அல்லாஹ் கூறுவதையே நபி (ஸல்) அவர்கள் முன் கூறப் பட்டவைகளைக் கொண்டு விளக்கமாகக் கூறியுள்ளார்கள்.”

மரண வேளையை அடைந்த பாவி ஒருவன் அந்த நிமிடம் முதல் தனக்கு கஷ்டமும் துன்பமும் ஆரம்பித்து விட்டதை உணர்கிறான். அப்பொழுது ஏற்படக் கூடிய துன்பத்தை வைத்து கப்ரிலும் மஹ்ஷரிலும், நரகிலும் மேலும் மேலும் தனக்குத் துன்பங்கள் அதிகரிக்கும் என்பதை உணர்கிறான்.

இதனால் தான் மரண வேளையின் போது தனக்கு மேலும் சந்தர்ப்பளிக்குமாறு அல்லாஹ்விடம் கெஞ்சி மன்றாடுகிறான். அதுவரை அவன் வாழ்ந்த வாழ்க்கையில் நல்ல பல வாய்ப்புக்களைத் தவற விட்டதாக முறையிடுகிறான். தனது தவறை ஒப்புக் கொள்கிறான். அவனுடைய முறையீடும்,

மன்றாட்டமும் எவ்விதப் பயனுமற்றது என்பதாக மரண வேளையின் போது கூறயுள்ள பதிலைப் படிப்பினைக்காக இப்பொழுதே அல்லாஹ் கூறிவிடுகிறான்.

فَيَقُوْلَ رَبِّ لَوْلَا اَخَّرْتَنِىْ اِلَى اَجَلٍ قَرِيْبٍ فَاَصَّدَّقَ وَاَكُنْ مِنَ الصَّالِحِيْنَ وَلَنْ يُّؤَخِّرَ اللّٰهُ نَفْسًا اِذَا جَاءَ اَجَلُهَا وَاللّٰهُ خَبِيْرٌ بِمَا تَعْمَلُوْنَ.

"(பாவி ஒருவன் மரிக்கும் சமயத்தில்) 'என் இறைவனே! ஒரு சொற்ப காலத்துக்கு என்னை நீ விட்டு வைக்க வேண்டாமா? (அவ்வாறு விட்டு வைத்தால்) நான் தானமும் செய்வேன்; (நன்மைகள் பல செய்து) நல்லோர்களிலும், ஆகிவிடுவேன்' என்று கூறுவான். எனினும், யாதோர் ஆத்மாவுக்கும் அதற்குரிய தவணை வரும் பட்சத்தில் (அதனை) அல்லாஹ் பிற்படுத்தவே மாட்டான்"

திருக்குர்ஆன் 63 : 10,11

மரண வேளையில் நடைபெறுவது என்னவென்பதை மரணிப்பவன் மட்டுமே அறியமுடியும். அவனைச் சூழ எத்தனை பேர் நின்றிருந்த போதிலும் அங்கு நடைபெறுவது என்ன வென்பதை அவனன்றி வேறெவரும் அறிய முடியாது.

அல்குர்ஆன் அனைத்தும் அல்லாஹ்வுடைய வஹீ என்று நாம் நம்புகிறோம். இதனடிப்படையில் பாவி ஒருவனுக்கு மரண கஷ்டம் ஏற்படுவது உண்மை என்பதை முன் கூறப்பட்ட (47:27,28) வசனங்களைக் கொண்டு நம்புவது நம் மீது கட்டாயக் கடமையாகின்றது.

ஒரு மூமினைப் பொறுத்தவரையில் அவனுக்கு மரண வேளையும் கஷ்டமாக அமைவதில்லை ; கப்ர் வாழ்வும் கஷ்டமாக அமைவதில்லை. இவ்விரண்டையும் சிறப்பாக அடைந்து கொள்வதே அவனுடைய இவ்வுலக வாழ்வின் நோக்கமாகும்.

கப்ரில் நல்லவனுக்கு சுவர்க்கமும் தீயவனுக்கு நரகமும் காட்டப்படும்

கப்ர் வாழ்வு நல்லவர்களுக்கு எவ்வாறு அமையும்? தீயவர்களுக்கு எவ்வாறு அமையும்? என்பதை அந்த வாழ்வை அனுபவிப்பதற்கு முன்னரே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிகத்தெளிவாகக் கூறி விட்டார்கள். நன்மை தீமை இரண்டில் ஒன்றைத் தேர்வு செய்து கொள்ள, இப்புவியில் இருப்பது போன்ற சுதந்திரம் கப்ரில் இல்லை. இவ்வுலக வாழ்வில் தேடியவற்றை அனுபவிக்கும் இடைக்கால உலகொன்றாகவே அது இருக்கின்றது. நல்லவனுடைய நிலை அங்கு இன்பமாகவும், தீயவனுடைய நிலை துன்பமாகவும் அமைகின்றது. அது பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னவைகளில் சிலவற்றை அவதானிப்போம்.

“ஒரு அடியான் கப்ரினுள் வைக்கப்பட்ட பின் அவனது தோழர்கள் திரும்பி வருகின்றபோது அவர்களுடைய பாதணிகளின் சப்தத்தைக் கூட அவன் செவியுறுவான். அப்போது அவனிடம் இரண்டு மலக்குகள் வந்து (பல கேள்விகள் கேட்பார்கள்.) அதன் தொடரில் நபி (ஸல்) அவர்களைக் குறித்து) இந்த மனிதரைப் பற்றி நீ என்ன சொல்கிறாய்? என்று கேட்பார்கள். ஒரு மூமினைப் பொறுத்தவரையில் அக்கேள்விக்கு “அவர் அல்லாஹ்வுடைய அடியாரும் அவனுடைய தூதருமாவார்கள் என நான் சாட்சி கூறுகிறேன்” என்று கூறுவான்.

அப்பொழுது அவனை நோக்கி "நரகில் உனக்குத் தரப்படவிருந்த இடத்தைப் பார்; அவ்விடத்துக்குப் பகரமாக உனக்கு சுவர்க்கத்தில் ஓரிடம் தரப்படுகிறது" என்று கூறப்படும். அப்பொழுது (சுவர்க்கம், நரகம் ஆகிய) அவ்விரண்டையும் அவன் காண்பான்.

முனாபிக், காபிர் இருவரையும் நோக்கி (நபி (ஸல்லல்லாஹு) அவர்களைக் குறித்து) இந்த மனிதரைப் பற்றி நீ என்ன சொல்கிறாய் என்று கேட்கப்படும். "அவரைப் பற்றி மக்கள் ஏதேதோ சொல்லுவதையே நானும் சொல்லிக் கொண்டிருந்தேன். (அது என்னவென்று இப்பொழுது) எனக்குத் தெரியாது; நான் அது பற்றி அறியவுமில்லை" என்று கூறுவான்.

அப்பொழுது அவன் இரும்புச் சம்மட்டியால் அடிக்கப் படுவான். ஒவ்வொரு அடியின் போதும் அவன் எழுப்புகின்ற ஓசையை மனிதனையும் ஜின்னையும் தவிர (பூமியிலுள்ள) எல்லா உயிரினங்களும், செவிமடுக்கும் என்று நபி (ஸல்லல்லாஹு) அவர்கள் கூறினார்கள்,

அறிவிப்பவர் : அனஸ் (ரலி)
நூல்கள்: புகாரி, முஸ்லிம்

"கப்ர் வாழ்வில் மலக்குகளுடைய தொடர்பு மனிதனுக் குண்டு" என்பதை மேற்காட்டிய அறிவிப்பு சந்தேகத்துக் கிடமின்றித் தெளிவு படுத்திவிட்டது. அந்தத் தொடர்பு நல்லவர்களை வாழ்த்துவதாகவும், தீயவர்களைத் தாழ்த்துவதாகவும் அமைகின்றது.

நல்லவர்களாயினும், தீயவர்களாயினும் அவர்களுக்கு தினமும் கப்ரில் சுவர்க்கம், நரகம் இரண்டும் காட்டப்படுகின்றன. அங்கு கேட்கப்படும் கேள்விகளுக்கு நல்லவர்கள் தயக்கமின்றிப் பதிலுரைப்பார்கள். அதனைத் தொடர்ந்து

காலையும் மாலையும் அவர்களுக்கு சுவர்க்கமும் அதிலுள்ள சுகங்களும் காட்டப்படும். அதன் மூலம் மறுமை நாள் வரை அவர்கள் மனமகிழ்ந்தவர்களாக உறங்கிக் கொண்டிருப் பார்கள்.

முனாபிக், காபிர்களிடம் கேட்கப் படுகின்ற கேள்வி களுக்கு அவர்களால் பதிலளிக்க முடியாமல் திணறுவார்கள். மறுமை நாள் வரை காலையும் மாலையும் அவர்களுக்கு நரகம் காட்டப்படும். அதனைக் கண்ணுற்று அவர்கள் திடுக்கிற்றவர் களாகவும், தங்களது எதிர்காலம் குறித்துக் கவலையடைகின்ற வர்களாகவும் இருப்பார்கள். ஒன்றன் பின் ஒன்றாக பல வித வேதனைகள் அவர்களுக்கு வழங்கப்படும். மறுமை நாள் வரை நிம்மதியின்றி வேதனையுடன் கப்ர் வாழ்க்கையைக் கழிப்பார்கள்.

மனிதனுடைய கணிப்பின் ஆயிரம் வருடங்கள் அல்லாஹ்வுடைய கணிப்பில் ஒரு நாளாகும்

இம்மை மறுமையின் கால வித்தியாசத்தை அதிகமானவர்கள் அறிய மாட்டார்கள். மனிதனுடைய கணிப்பின் படியுள்ள ஆயிரம் வருடங்கள் அல்லாஹ்வுடைய கணிப்பின்படி ஒரு நாளாகும் என்று அல்குர்ஆன் கூறுகின்றது.

وَاِنَّ يَوْمًا عِنْدَ رَبِّكَ كَاَلْفِ سَنَةٍ مِمَّا تَعُدُّوْنَ.

நிச்சயமாக நீங்கள் கணக்கிடும் ஆயிரம் வருடங்கள் உமதிறைவனிடத்தில் ஒரு நாளுக்குச் சமமாகும்.

திருக்குர்ஆன் 22 :47

இம்மை வாழ்க்கை என்பது அல்லாஹ்வுடைய கணிப்பின்

படி சில நாட்கள் கொண்டதாகும். இதன் படி ஒவ்வொரு தனி மனிதனுடைய வாழ்வும் அல்லாஹ்வுடைய கணிப்பின் படி சிலமணித்தியாலங்கள் கொண்டதாகும்.

மறுமை வாழ்க்கைக்குப் பின்னர் வேறொரு வாழ்க்கை இல்லை. நல்லவனாக அங்கு சென்றவன் நல்ல வாழ்க்கையில் நிரந்தரமாக இருப்பான். இது பற்றி அல்குர்ஆன் கூறுகின்றபோது:

إِنَّ الَّذِيْنَ آمَنُوْا وَعَمِلُوا الصَّالِحَاتِ كَانَتْ لَهُمْ جَنَّاتُ الْفِرْدَوْسِ نُزُلاً خَلِدِيْنَ فِيْهَا لاَ يَبْغُوْنَ عَنْهَا حِوَلاً.

"எவர் மெய்யாகவே விசுவாசங் கொண்டு நற்கருமங்கள் செய்கிறார்களோ அவர்கள் 'ஃபிர்தவுஸ்' என்னும் சுவன பதிகளில் உபசரிக்கப்படுவார்கள். அதில் என்றென்றும் அவர்கள் நிலைத்துவிடுவார்கள். அதிலிருந்து வெளிப்பட விரும்பவே மாட்டார்கள். திருக்குர்ஆன் 18:107,108

தீயவர்களுடைய நிலை நல்லவர்களுடைய நிலைக்கு முற்றிலும் மாறானதாகும். அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது தீமைக்கேற்ப கஷ்டமான வாழ்க்கையை அனுபவிப்பார்கள். அல்குர்ஆன் இது பற்றிக் கூறும்போது :

وَالَّذِيْنَ كَفَرُوْا وَكَذَّبُوْا بِآيَاتِنَا أُوْلَئِكَ اَصْحَابُ النَّارِ هُمْ فِيْهَا خَالِدُوْنَ.

"அன்றி, எவர் நிராகரித்து நம்முடைய வசனங்களைப் பொய்யாக்குகின்றார்களோ அவர்கள் நரக வாசிகளே! அவர்கள் அதில் என்றென்றும் தங்கி விடுவார்கள்".

திருக்குர்ஆன் 2 :39

இம்மைக்கும் மறுமைக்கும் இடைப்பட்ட, வரையறுக் கப்பட்ட வாழ்க்கையே கப்ர் வாழ்க்கையாகும். கப்ரில் விசாரணைக்காக வரக்கூடிய மலக்குகள் பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்.

“உங்களில் ஒருவர் மரணித்து அடக்கம் செய்யப்பட்டால் அவரிடம் கரு நிறமான, நீல நிறக் கண்களுடைய இரண்டு மலக்குகள் வருவார்கள். அவர்கள் முன்கர் என்றும் நகீர் என்றும் அழைக்கப்படுவார்கள். அவர்கள் (நபி ஸல்லல்லாஹு) அவர்களைக் குறித்து அவனிடத்தில் “இந்த மனிதரைப் பற்றி நீ என்ன சொல்கிறீர்?” என்று கேட்பார்கள். அவன் (மூமினாக இருந்தால்)” அவர்கள் அல்லாஹ்வுடைய அடியாரும் அவனுடைய தூதருமாவார்கள்” என்றும் வணக்கத்துக் குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறெவருமில்லை, முஹம்மத் (ஸல்லல்லாஹு) அல்லாஹ்வுடைய தூதராவார்கள் என்றும் சாட்சி கூறுகிறேன்” என்று கூறுவான்.

அப்பொழுது அந்த மலக்குகள் அவனை நோக்கி “நீ இவ்வாறு கூறுவாய் என்பதை ஏற்கெனவே நாம் அறிந்திருந்தோம்” என்று கூறுவார்கள். அதனைத் தொடர்ந்து அவனுடைய கப்ர் எழுபது முழங்கள் விசாலமாக்கப்படும். பின்னர் அந்த கப்ர் ஒளியேற்றப்பட்டு, பிரகாசமாக்கப்படும்.

அவனை நோக்கி “நீ உறங்குவாயாக!” என்று கூறுவார்கள். அவனோ அவர்களை நோக்கி: என்னுடைய குடும்பத்தாரிடம் நான் சென்று (எனக்குக் கிடைத்துள்ள இந்நற்பாக்கியத்தை) அறிவித்து விட்டு வர என்னை விட்டு விடுங்கள்” என்று கூறுவான். அப்போது அந்த மலக்குகள்

“மிக விருப்பத்துக்குரிய ஒருவரேயன்றி வேறெவரும் எழுப்பாதள வுள்ள மணமகனின் உறக்கமாக நீ உறங்குவாயாக!” என்று கூறுவார்கள். அன்று முதல் மறுமை நாள் வரை அவன் உறங்கிக் கொண்டே இருப்பான்.

முனாபிக் ஒருவனிடம் கேள்வி கேட்கும் போது, “மக்கள் ஏதேதோ சொல்ல நான் கேட்டிருக்கிறேன். ஆனால் (இப்பொழுது எதுவும்) எனக்குத்தெரியாது” என்று கூறுவான். அப்பொழுது அந்த மலக்குகள் அவனை நோக்கி “ நீ இவ்வாறே பதிலளிப்பாய் என்பதை ஏற்கெனவே நாம் அறிந்து வைத்திருந்தோம்” என்று கூறுவார்கள்.

அதனைத் தொடர்ந்து அவனை நெருக்குமாறு பூமிக்கு உத்தரவிடப்படும். அவனுடைய (வலது இடது) விலா எலும்புகள் ஒன்றோடொன்று பின்னிக் கொள்ளுமளவு அவனைப் பூமி நெருக்கும். அவனை அந்த இடத்திலிருந்து அல்லாஹ் எழுப்புகின்ற நாள் வரை அவன் வேதனை செய்யப்பட்டுக் கொண்டே இருப்பான்” என்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி)
நூல் : திர்மிதி

கப்ர் ஒரு நபித் தோழரைக் கூட நெருக்கியது

கப்ர் என்பது எந்த ஒரு மனிதனையும் இலகுவாக விட்டு விடாது. அல்லாஹ்வுடைய உத்தரவுப்படி வேதனைகளை அது அளிக்காமல் விட்டு விடாது. கப்ரில் ஒருவனுக்கு மீட்சி கிடைத்து விட்டால் அவனுக்கு மறுமையில் மீட்சி கிடைத்தது போன்றதாகும். நபித் தோழர்களில் நபியவர்களுக்கு மிக

விருப்பத்துக்குரிய ஒரு தோழரான ஸ.்.து (ரலி) அவர்களின் ஸக்ராத்துடைய நிலை நமக்குப் படிப்பினையூட்டக் கூடியதாய் அமைந்துள்ளது.

ஸ.்.து (ரலி) அவர்கள் அகழ் யுத்தத்தின் போது கடுமையாகக் காயமுற்று நோயுற்றிருந்தார்கள். அவருடைய வீடு சற்றுத் தூரத்திலிருந்ததால் அடிக்கடி அவரை நலம் விசாரிக்கச் செல்ல நபியவர்களுக்கு சிரமமாயிருந்தது. அடிக்கடி சென்று அவரைப் பார்ப்பதற்காக, அவருக்கென்று மஸ்ஜிதுந் நபவிக்கு அருகில் சிறு வீடொன்று அமைத்துக் கொடுக்குமாறு நபியவர்கள் தமது தோழர்களில் சிலரைப் பணித்தார்கள்.

அவ்விதமே வீடு கட்டிக் கொடுக்கப்பட்டது. அதன் பின்னால் நபியவர்கள் அடிக்கடி அவரைப் பார்த்து வந்தார்கள். ஒரு நாள் இரவு நடுநிசியில் ஜிப்ரீல் (அலை) நபி (ஸல்) அவர்களிடம் வந்து "வானத்திலும் பூமியிலும் உள்ளவர்களைக் கவலையடையச் செய்யக் கூடியதாக ஒருவர் மரணித்து விட்டார். அதனையிட்டு அல்லாஹ்வுடைய அர்ஷு கூட நடுங்குகிறது" என்று சொல்லி விட்டுச் சென்றார்.

உடனே நபி (ஸல்) அவர்கள் ஸ.்.து (ரலி) அவர்களிடம் சென்று பார்த்த போது அவர் இறந்திருக்கக் கண்டார்கள். மறுநாள் அந்த ஜனாஸா அடக்கம் செய்யப் படுவதற்காக எடுத்துச் செல்லப்பட்டு, கப்ரினுள் வைக்கப்படுவதைப் பார்த்துக் கொண்டிருந்த நபியவர்கள் திடீரென 'ஸுப்ஹானல்லாஹ்' என்றார்கள். நபித்தோழர்களும் அதனைத் தொடர்ந்து 'ஸுப்ஹானல்லாஹ்' என்றனர்.

சற்று நேரத்தில் 'அல்லாஹு அக்பர்' என்று நபியவர்கள் கூறினார்கள். நபித்தோழர்களும் அவ்விதமே கூறினார்கள். இவ்விரு வார்த்தைகளாலும் ஆச்சரியமடைந்த நபித்தோழர்கள்

ஜனாஸா அடக்கம் செய்யப்பட்டு முடிந்ததும், "யாரஸூலல்லாஹ்! வழக்கத்திற்கு மாறாக இன்று கவலையுடன் 'ஸுப்ஹானல்லாஹ்' என்றும், மீண்டும் சந்தோஷத்துடன் 'அல்லாஹு அக்பர்' என்றும் கூறினீர்களே! இதன் காரணமென்ன?" என்று கேட்டார்கள்.

அப்பொழுது நபியவர்கள், "ஸஃது (ரலி) கப்ரினுள் வைக்கப்பட்டுக் கொண்டிருந்த போது, கப்ர் அவரை நெருக்குவதைக் கண்ணுற்றேன். அப்பொழுது கவலையுடன் ஸுப்ஹானல்லாஹ் என்றேன். அதனைத் தொடர்ந்து கப்ர் அவரை நெருக்குவதை விட்டு அவருக்கு இடம் கொடுத்தது, அப்பொழுது 'அல்லாஹு அக்பர்' என்றேன்" என்று கூறி விட்டு, "ஒவ்வொரு கப்ரும் ஒவ்வொரு மனிதனையும் நெருக்காமல் விட்டு விடாது. அதிலிருந்து ஒருவர் மீட்சி பெறமுடியுமென்றிருந்தால் ஸஃது மீட்சி பெற்றிருப்பார்" என்று கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஜாபிர் (ரலி)
நூல்கள் : அஹ்மத், நஸாஈ

ஸஃது (ரலி) அவர்களின் சம்பவம் நன்கு கவனிக்கத் தக்கதாகும். அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு மிக விருப்பத்துக்குரிய ஒரு தோழர், அவருடைய மரணம் குறித்து வானத்தின் வாயில்கள் திறக்கப் பட்டதாகவும், அல்லாஹ் வுடைய அர்ஷு நடுங்கியதாகவும் ஜிப்ரீல் (அலை) நபியவர் களிடம் சொல்லுமளவு அந்தஸ்தில் உயர்ந்தவர்களாயிருந் தார்கள். இப்படியான ஒருவரைக் கூட கப்ர் நெருக்காமல் விடவில்லையென்றால் ஏனையோரின் நிலைதான் என்ன?

கப்ர் வைக்கப்படுகின்ற ஒவ்வொருவரையும் அது ஒரு நெருக்கு நெருக்கி விடுகிறது. அவன் ஒரு முஃமின் என்று அறியவருகின்றபோது நெருக்குதலை விட்டு விடுகிறது. நிராகரிக்கிறவன் என்று அறிய வருகின்ற போது வலமும் இடமுமுள்ள விலா எலும்புகள் ஒன்றுடன் ஒன்று பின்னுகின்ற

வரை நெருக்குதலை மேலும் மேலும் அதிகப் படுத்துகின்றது என்பதை இதனைக் கொண்டு அறியலாம். இதனடிப் படையிலேயே ஸஃது (ரலி) அவர்களையும் நெருக்கி விட்டுப் பின்னர் நெருக்குதலை விட்டு விட்டது. பின்வரும் நபிமொழியொன்று இதனை உண்மைப்படுத்துகின்றது.

“நிச்சயமாக ஒவ்வொரு கப்ரும் நெருக்கக் கூடியதாய் இருக்கின்றது. அதிலிருந்து ஒருவன் மீட்சி பெற முடியுமென்றிருந்தால் ஸஃது மீட்சி பெற்றிருப்பார்” என்று நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஆயிஷா (ரலி)
நூல் : அஹ்மத்

நபியவர்களுடைய கனவில் தோன்றிய கோரக் காட்சிகள்

கனவில் கண்ட காட்சிகள் மூலமாகவும் நபி (ஸல்) அவர்கள் கப்ருடைய வேதனை பற்றிப் பல சந்தர்ப்பங்களில் கூறியுள்ளார்கள். நபிமார்களுடைய கனவும் வஹியின் ஒரு பகுதியாகும். வஹியை நம்புவது போலவே நபிமார்களுடைய கனவையும் நம்புவது நம்மீது கடமையாகின்றது. நபி (ஸல்) அவர்கள் பல சந்தர்ப்பங்களில் ஸுப்ஹுத் தொழுகையின் பின்னால் தமது தோழர்களை நோக்கி, “எவரேனும் இரவில் கனவுகள் கண்டதுண்டா?” என்று கேட்டு, அவற்றிற்கு விளக்க மளிப்பவர்களாயிருந்தார்கள். ஒரு தினம் வழக்கம் போல் கேட்டார்கள். அன்று எவரும் பதிலளிக்காததால் தாமே ஒரு கனவு கண்டதாகப் பின்வருமாறு கூறினார்கள்.

“கடந்த இரவு கனவில் என்னிடம் இருவர் வந்து என்னை அழைத்துக் கொண்டு சிறிது தூரம் சென்றனர். அவர்கள் செல்லும் வழியில் நானும் நடந்தேன். அவ்வழியில் ஒருவன்

சாய்ந்து படுத்துக் கொண்டிருந்தான். அவனுக்கருகில் ஒருவர் பெரிய கல்லொன்றை வைத்துக் கொண்டு நின்றுக் கொண்டிருந்தார். அவர் அதனைப் படுத்துக் கொண்டிருந்தவனின் தலையில் போட்டார். அதனால் அவனது தலை தகர்ந்து, தூள் தூளானாது. அக் கல் உருண்டு கொண்டு போகவே அதனைத் தொடர்ந்து அம்மனிதர் சென்று அதைத் தூக்கிக் கொண்டு. தான் நின்ற இடத்துக்கே வந்து சேர்ந்தார். அப்போது சிதைத்திருந்த தலை மீண்டும் பழைய நிலைக்கு வந்து நன்றாக இருந்தது. மீண்டும், மீண்டும் அவ்விதமே அந்த வேதனை நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அதனைக் கண்ணுற்ற நான் என்னை அழைத்துச் சென்றவர்களிடம் "ஸுப்ஹானல்லாஹ்!" இவர்கள் யார்? என்று ஆச்சரியத்துடன் கேட்டேன் அவர்கள் என்னை நோக்கி நடந்து வருமாறு கூறினார்கள். நான்.அவர்களுடன் நடந்தேன்.

அப்பொழுது மல்லாந்து படுத்துக் கொண்டிருந்த ஒருவனுக்கருகில் சென்றோம். அவனுக்கருகில் முன் பக்கம் வளைந்த கம்பியொன்றைக் கையில் வைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்த ஒருவரைக் கண்டேன். அவர் படுத்துக் கொண்டிருந்தவனுடைய முகத்தின் ஒரு பக்கத்தால் வாயினுள் கம்பியைப் போட்டுப் பிடரி வரை கிழித்தார். பின் மூக்குத் துவராத்தில் கம்பியைப் போட்டு பிடரி வரை கிழித்தார். பின்னர் ஒரு கண்ணில் அதனைப் போட்டு பிடரி வரை கிழித்தார். அதனைத் தொடர்ந்து அவனுடைய முகத்தின் மறு பக்கத்தையும் அவ்வாறே கிழித்தார். இப் பக்கத்தைக் கிழித்து முடிய அப்பக்கம் மீண்டும் பழைய நல்ல நிலையை அடைந்திருந்தது. இவ்விதமே தொடர்ந்து அந்த வேதனை நடைபெற்றக் கொண்டிருந்தது. அப்பொழுதும் நான் "ஸுப்ஹானல்லாஹ்!" இவர்கள் யார்? என்று கேட்டேன். அதற்கவர்கள் தொடர்ந்து நடக்குமாறு எனக்குக் கூறினார்கள் நாங்கள் நடந்தோம்.

அப்பொழுது அடுப்பு போன்ற ஓரிடத்துக்குச் சென்றோம். அதன் தோற்றம் (கிணறு போன்று) ஆழமான ஒரு பொந்தாக இருந்தது. அதன் மேற்பாகம் நெருக்கமானதாகவும் கீழ்ப்பாகம் அகண்டதாகவும் இருந்தது. அதனுள்ளிருந்து பயங்கர சத்தம் வெளியாகிக் கொண்டிருந்தது.

அதனுள்ளே எட்டிப் பார்த்தோம். ஆடை எதுவுமின்றி ஆண்களும் பெண்களும் நிர்வாணமாக இருந்தனர். அதனுள்ளிருந்து நெருப்பு சுவாலைவிட்டு எரியும் போது, உள்ளிருப்பவர்கள் (நீரில் மிதப்பது போன்று) மிதந்து வருகின்றனர். அதிலிருந்து அவர்கள் வெளியேறி விடக்கூடிய அளவு மேல் மட்டத்திற்கு வருகின்ற போது நெருப்பு அணைந்து, மீண்டும் அடித்தளத்துக்கே சென்று விடுகின்றனர்.

இந்த வேதனையும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருந்தது. அதனைத் கண்ணுற்றதும் “அவர்கள் யார்?” என்று கேட்டேன். அப்பொழுதும் அவர்கள் என்னை நடக்குமாறு கூறினார்கள். பின்னர் இரத்த நிறமான நதியொன்றுக்கருகில் சென்றோம். அந்த நதியில் ஒருவன் நீந்திக் கொண்டிருந்தான். மற்றொருவர் நதி ஓரத்தில் நின்று கொண்டிருந்தார். அவருடைய காலுக்கருகில் கற்கள் நிறைந்திருந்தன. நீந்திக் கொண்டிருந்தவன் கரை வந்து சேருகின்ற போது நின்று கொண்டிருந்தவர் ஒரு கல்லை அவனுடைய வாயினுள் போட்டுவிடுகிறார். அவன் கல்லை விழுங்கிக் கொண்டு மீண்டும் நீந்திச் செல்கிறான். மீண்டும் கரைக்கு வருகிறான். இந்த வேதனையும் தொடர்ந்து நடை பெற்றுக் கொண்டே இருந்தது.

இப்படி நான் கண்ட காட்சிகளுக்கு என்னுடன் வந்த இருவரிடமும் இறுதியில் விளக்கம் கேட்ட போது ஒன்றன்பின் ஒன்றாக விளக்கமளித்தார்கள்.

1. கல்லினால் தலை தகர்க்கப்பட்டவன், அல்குர்ஆனைப் படித்தான். ஆனால் அதன்படி அவனது வாழ்வை அமைத்துக் கொள்ளவில்லை. பர்ளான தொழுகையைத் தொழாமல் உறங்கி விட்டான்.

2. வலமும் இடமுமாக முகம் கிழிக்கப் பட்டவன் காலையில் வீட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்றால் (தனது வயிற்றுப் பிழைப்புக்காக) பொய் சொல்லுவதையே வழக்கமாக்கிக் கொண்டான்.

3. பொந்தினுள் கண்ட நிர்வாணிகளான ஆண்களும், பெண்களும் விபசாரத்தில் ஈடுபட்டவர்கள்.

4. இரத்த நிறமான நதியொன்றில் நீந்திக் கொண்டு கற்களை விழுங்கிக் கொண்டிருந்தவன் வட்டியை உண்டவன்.

நபி(ஸல்) அவர்கள் தமது கனவை மேற்கண்டவாறு சொன்னார்கள். பர்ஸகுடைய உலகில் நடைபெறும் இவ்வாறான வேதனைகள் மறுமை நாள் வரை நடைபெறும் என்றும் அவர்கள் சொன்னார்கள்.

அறிவிப்பவர் : ஸமுரா இப்னு ஜுன்துப் (ரலி)
நூல் : புகாரி

மறுமை வாழ்வில் நம்பிக்கையுள்ளவர்களில் கூடச் சிலர் கப்ர் வாழ்வைப் பற்றி சந்தேகப்படுவதுண்டு. கப்ருடைய வாழ்வு இம்மைக்கும் மறுமைக்கும் இடைப்பட்ட இடைக்கால வாழ்வாகும்.

கனவு காண்பதை மறுப்பவர் எவருமில்லை. அதனைக் கண்டவன் அடுத்தவனுக்கு நிரூபித்துக் காட்டுவது எவ்வாறு முடியாதோ, அவ்வாறே கப்ருடைய வாழ்வையும் நிரூபிப்பது

முடியாத காரியமாகும். அந்த வாழ்வு பற்றி நபி (ஸல்) அவர்கள் சொன்னதை அணுவளவும் சந்தேகிக்காமல் நம்புவது நம்மீது கடமையாகின்றது.

ஒரு முமினுடைய மரண வேளையின் போது மலக்குகள் அவனிடம் வந்து அவனை வாழ்த்துகிறார்கள். அவனுடைய ரூஹைச் சுமந்து செல்லும் போது ஒவ்வொரு வானத்திலுள்ள மலக்குகளும் அவனை வாழ்த்துகிறார்கள். கப்ரில் நடைபெறும் விசாரணையை அடுத்து சுவர்க்கத்தின் உபசரிப்புகளில் சில அவனுக்கு அளிக்கப் படுகிறது. மறுமை நாள் வரை அவன் அந்த வாழ்வை சுகமாக அனுபவிக்கிறான்.

ஸக்ராத்தில் கேட்ட தௌபா நிராகரிக்கப்பட்டது

மனோ இச்சையை அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கையை நடத்தி, அதே நிலையில் மரணத்தைத் தழுவுகின்றவனுடைய நிலை பரிதாபத்துக்குரியது. மரண வேளையில் அவன் சொல்லொண்ணாத் துயர்களை அனுபவிக்கிறான். மலக்குகள் அவனை அடித்துத் துன்புறுத்திப் பலவந்தமாக உயிரைக் கைப்பற்றுகிறார்கள்.

அவனுடைய உயிரைச் சுமந்து செல்லும் மலக்குகள் வெறுப்புடனேயே சுமக்கிறார்கள். அவனுடைய உயிர் உடலை விட்டுப் பிரிந்தவுடன் துர்வாடையொன்று வீசுகிறது. முதலாவது வானத்திலுள்ள மலக்குகள் அந்த வாடையை முகர்ந்து அதனை வெறுக்கிறார்கள். அவனுக்காக வானத்தைத் திறந்து விட மறுக்கிறார்கள். அல்லாஹ்வுக்கு மாறு செய்கின்றவர் களுக்கு ஏற்படக்கூடிய இது போன்ற நிலைகளை அல்லாஹ் பலவாறாக விளக்குகிறான். அந்த வழியில் பிர்அவ்னுடைய மரண வேளை மனித வர்க்கத்திற்குச் சான்றாய் அமைகின்றது. அல்குர்ஆன் அதனைப் பின்வருமாறு கூறுகின்றது.

وَجَاوَزْنَا بِبَنِى اِسْرَائِيْلَ الْبَحْرَ فَاَتْبَعَهُمْ فِرْعَوْنُ وَجُنُوْدُهُ بَغْيًا
وَعَدْوًا حَتّٰى اِذَا اَدْرَكَهُ الْغَرَقُ قَالَ آمَنْتُ اَنَّهُ لآ اِلٰهَ اِلاَّ الَّذِىْ
اٰمَنَتْ بِهِ بَنُوْ اِسْرَائِيْلَ وَاَنَا مِنَ الْمُسْلِمِيْنَ. آلآنَ وَقَدْ
عَصَيْتَ قَبْلُ وَكُنْتَ مِنَ الْمُفْسِدِيْنَ.

“இஸ்ராயீலின் வழித்தோன்றல்களைக் கடலைக் கடக்கும் படி நாம் செய்தோம். பிர்அவுனும் அவனுடைய இராணுவங்களும் அளவு கடந்த கொடுமை செய்ய(க் கருதி) அவர்களைப் பின் தொடர்ந்து சென்றார்கள். (ஆகவே அவர்களை நாம் கடலில் மூழ்கடித்து விட்டோம்) பிர்அவுன் மூழ்க ஆரம்பிக்கவே அவன், ‘இஸ்ராயீலின் வழித்தோன்றல்கள் விசுவாசித்திருக்கும் இறைவனை நானும் விசுவாசிக்கிறேன். அவனைத் தவிர வேறு நாயனில்லை. அவனுக்கு முற்றிலும் வழிப்படுவோரில் (ஒருவனாக) நானும் இருக்கிறேன்’. என்று (அபயந்தேடி) அலறினான். (அதற்கு நாம் அவனை நோக்கி) இத்தருணத்தில் தானா (நீ விசுவாசிக்கிறாய்?) சற்று முன் வரையில் நீ மாறு செய்து கொண்டு, விஷமிகளில் ஒரு (தலை)வனாகவே இருந்தாய். (என்று கூறினோம்.)”

திருக்குர்ஆன் 10 : 90,91

நாத்தழுக்க நாத்திகம் பேசியவர்களின் வரிசையில் பிர்அவுனுக்கு நிகராக எவருமில்லை என்று கூறலாம். மரண வேளையின் துன்பங்கள், கப்ருடைய வாழ்வு, மறுமை வாழ்வு என்பனவற்றையெல்லாம் அவன் கற்பனை வடிவங்களாகக் கண்டான். ஆனால் அவன் தனது மரணவேளையின்போது, தான்

நினைத்தவை தாம் கற்பனை என்றும், தனக்குக் கிடைத்த போதனைகள் அனைத்தும் உண்மையானவை என்றும் நம்பினான்; அல்லாஹ்விடம் ஒப்புக் கொண்டான்.

அவனுடைய விசுவாசம் இதயபூர்வமாக இருந்தாலும் காலம் கடந்தது. அதனால் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அவனுடைய விசுவாசத்தை அல்லாஹ் அவனுடைய முகத்தில் தூக்கி எறிகிறான். அவனுடைய வாழ்வும், மரண வேளையும் அவனுக்குப் பின்னாலுள்ள மனித சமுதாயத்துக்குப் படிப்பினையூட்டுவதாய் அமைந்து விட்டன.

மரணவேளையின் போது காபிர்களுடைய தௌபா மட்டும் தான் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது என்பதற்கில்லை. பாவிகளுடைய தௌபா கூட மரண வேளையின் போது ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை என்பதை அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்.

وَلَيْسَتِ التَّوْبَةُ لِلَّذِيْنَ يَعْمَلُوْنَ السَّيِّاٰتِ حَتّٰى اِذَا حَضَرَ
اَحَدَهُمُ الْمَوْتُ قَالَ اِنِّىْ تُبْتُ الْآنَ وَلاَ الَّذِيْنَ يَمُوْتُوْنَ وَهُمْ
كُفَّارٌ اُولٰئِكَ اَعْتَدْنَا لَهُمْ عَذَابًا اَلِيْمًا.

“பாவங்களைச் செய்து கொண்டே இருப்பவர்களில் ஒருவருக்கு மரணம் சமீபித்த போது, ‘இதோ நான் (என் பாவங்களுக்காக) வருந்துகிறேன்.’ என்று கூறுகின்றாரோ அவருக்கும் எவர்கள் (விசுவாசங் கொள்ளாது நிராகரித்து விட்டு) நிராகரித்த வண்ணமே இறந்தும் விடுகிறாரோ அவருக்கும், பாவ மன்னிப்புக் கிடையாது. இத்தகையோருக்குத் துன்புறுத்தும் வேதனையைத் தான் நாம் சித்தப்படுத்தி

வைத்திருக்கிறோம்.”

திருக்குர்ஆன் 4 : 18

கப்ரிலுள்ள பாவிகளுக்குக் காலையும் மாலையும் நரகம் காட்டப் படுகிறது

கப்ருடைய வேதனையின் போது பாவிகளுக்குக் காலையும் மாலையும் நரகம் காட்டப்படும் என்பதை பிர்அவுனுடைய கூட்டத்தை ஆதாரமாகக் காட்டி அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்.

وَحَاقَ بِآلِ فِرْعَوْنَ سُوْءُ الْعَذَابِ النَّارُ يُعْرَضُوْنَ عَلَيْهَا غُدُوًّا
وَعَشِيًّا وَيَوْمَ تَقُوْمُ السَّاعَةُ اَدْخِلُوْا آلَ فِرْعَوْنَ اَشَدَّ الْعَذَابِ.

பிர்அவுனுடைய கூட்டாத்தார்களைத் தீய வேதனை சூழ்ந்து கொண்டது. காலையிலும் மாலையிலும் அவர்கள் நரக நெருப்பின் முன், கொண்டு போகப் படுவார்கள். மறுமை நாளிலோ “பிர்அவுனுடைய கூட்டத்தார்களைக் கடினமான வேதனையில் புகுத்துங்கள்” (என்று கூறுப்படும்)

திருக்குர்ஆன் 40 : 45,46

பத்ர் யுத்தத்தில் காபிர்கள் தரப்பில் கொல்லப் பட்டவர்கள் பாழடைந்த கிணறொன்றில் போடப்ப(ட்டுப் புதைக்கப்பட்)டார்கள். அவ்விடத்துக்குச் சென்ற நபி (ஸல்) அவர்கள் “உங்களுடைய இறைவன் (உங்களுக்குக் கிடைக்கு மென்று) உங்களுக்கு வாக்களித்ததை உண்மையாகவே நீங்கள் பெற்றுக் கொண்டீர்களா?” என்று கேட்டார்கள். அப்போது “மரணித்தவர்களிடம் கேட்கின்ற இக்கேள்வியை

அவர்கள்செவிதாழ்த்துவார்களா?" என்று (நபியவர்களிடம்) நபித்தோழர்களால் கேட்கப்பட்டது. அதற்கு நபியவர்கள் தமது தோழர்களை நோக்கி "நீங்கள் செவியுறுவதை விட நன்றாக இவர்கள் செவியுறுவார்கள். ஆனால் அவர்களால் அதற்குப் பதிலளிக்க முடியாது" என்று கூறினார்கள்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி)
நூல் : புகாரி

பத்ர் யுத்தத்தில் முஸ்லிம்களை எதிர்த்துப் போராடி கொல்லப்பட்டோர் புதைக்கப்பட்ட இடத்தில் வேதனை செய்யப்படுவதை நபி (ஸல்) அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளதை இங்கு அறிய முடிகின்றது.

சூரிய வெப்பம் கடுமையாகிக் கொண்டிருந்த ஒரு சந்தர்ப்பத்தில் நபியவர்கள் வீட்டிலிருந்து வெளியேறி வந்தார்கள். அப்பொழுது ஒரு சப்தத்தை அவர்கள் செவிதாழ்த்தி விட்டு, யூதர்கள் (சிலர்) தமது கப்ருகளில் வேதனை செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் (அது தான் இந்தச் சப்தம்) என்று கூறினார்கள்.

அறிவிப்பவர் : அய்யூப் (ரலி)
நூல் : புகாரி

யூதர்களின் கப்ருடைய வேதனை நபி (ஸல்) அவர்களுக்குக் காட்டப்பட்டது. கப்ருடைய வேதனைகளை நபியவர்கள் அறிவதைப் போல் ஏனையவர்கள் அறிய முடியுமென்றிருந்தால் மனிதன் இவ்வுலகில் உயிர் வாழ முடியாதளவு மயக்கமுற்று விழுந்து விடுவான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறிய அறிவிப்புக்கள் அதிகம் உண்டு.

கப்ருடைய வேதனையை யூதர்கள் கூட நம்பியிருந் தார்கள் என்பதற்கு ஆயிஷா (ரலி) கூறும் சம்பவமொன்று ஆதாரமாய் அமைகின்றது.

ஒரு யூதப் பெண் ஆயிஷா (ரலி) அவர்களிடம் வந்த போது கப்ருடைய வேதனை பற்றிக் கூறிவிட்டு "அல்லாஹ் உம்மைக் கப்ருடைய வேதனையிலிருந்து பாதுகாப்பானாக!" என்று கூறினாள். ஆயிஷா (ரலி) நபியவர்களிடம் கப்ருடைய வேதனை பற்றி வினவினார்கள். அதற்கு நபியவர்கள் "ஆம்! கப்ருடைய வேதனை உண்டு" என்று பதிலளித்தார்கள்.

"அதன் பின்னர் நபியவர்கள் எந்த ஒரு தொழுகை தொழுத போதிலும் கப்ருடைய வேதனையிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடாமலிருக்க நான் கண்டதில்லை" என்று ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஆயிஷா (ரலி)
நூல் : புகாரி

ஜனாஸாவின் புலம்பல்

ஒரு ஜனாஸா தூக்கிச் செல்லப்படும் போது உயிரற்ற ஒரு பிணத்தைத் தூக்கிச் செல்வதாகவே நாம் நினைக்கிறோம். மனிதர்களுடைய பார்வையின் படியும், உலக இயற்கையின் படியும் அதுதான் உண்மை. ஆனால் பர்ஸகுடைய உலகை நோக்கி தூக்கிச் செல்லப்படுகின்ற அந்த சடலம் ஓசை எழுப்பிக் கொண்டே செல்கிறது.

அவன் பாவியாக இருந்தால் புலம்ப ஆரம்பித்து விடுவான். மூமினாக இருந்தால் தான் செல்லவிருக்கும் இடத்துக்குத் தன்னை அவசரமாக எடுத்துச் செல்லுமாறு கூறிக் கொண்டிருப்பான். பின்வரும் நபிமொழி ஒன்று அதனைத் தெளிவு படுத்துகின்றது.

"ஒரு ஜனாஸாவை மனிதர்கள் சுமந்து செல்லும் போது,

அவன் ஒரு நல்லடியானாயிருந்தால் '(நான் தங்குமிடத்துக்கு) என்னை அவசரமாக எடுத்துச் செல்லுங்கள்' என்று சொல்லிக் கொண்டிருப்பான். அவன் பாவியாக இருந்தால் 'என்ன கேடுதான் (எனக்குப்) பிடித்து விட்டது' என்று கூறியவனாக அலறுவான். இந்த ஓசையை மனிதன் தவிர எல்லா உயிரினங்களும் செவி தாழ்த்தும். மனிதன் (இதனை) செவியுறுபவனாயிருந்தால் அவன் (மயக்கமுற்று) அடித்து விழுவான்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி) நூல் : புகாரி

நபி (ஸல்) அவர்கள் ஒவ்வொரு தொழுகையின் போதும் நான்கு வகையான சோதனைகளிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடாமலிருந்ததில்லை. அதில் முதலாவதாக கப்ருடைய வேதனையிலிருந்தே பாதுகாவல் தேடினார்கள். அந்த துஆ பின்வருமாறு அமைந்துள்ளது.

اَللّٰهُمَّ اِنِّى اَعُوْذُ بِكَ مِنْ عَذَابِ الْقَبْرِ وَاَعُوْذُ بِكَ مِنْ عَذَابِ النَّارِ وَاَعُوْذُ بِكَ مِنْ فِتْنَةِ الْمَحْيَا وَالْمَمَاتِ وَاَعُوْذُ بِكَ مِنْ فِتْنَةِ الْمَسِيْحِ الدَّجَّالِ.

"அல்லாஹ்வே! கப்ருடைய வேதனை, நரக வேதனை, வாழ்க்கையிலும் மரணத்தின் போதும் ஏற்படக்கூடிய சோதனை, தஜ்ஜாலுடைய வருகையால் ஏற்படக் கூடிய சோதனை ஆகியவற்றிலிருந்து உன்னிடம் நான் பாதுகாவல் தேடுகிறேன்."

அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரலி)

நூல் : புகாரி

நபியவர்களைக் கவிழ்த்த கழுதை

கப்ரில் நடைபெற்றுக் கொண்டிருந்த வேதனைகளை நபி (ஸல்) அவர்கள் செவியுற்ற சம்பவமொன்றை ஸைத் இப்னு ஸாபித் (ரலி) பின்வருமாறு அறிவிக்கிறார்கள்.

பனூ நஜ்ஜார் கோத்திரத்தாரின் மதில் அருகே கோவேறு கழுதை ஒன்றில் நபி (ஸல்) அவர்கள் சவாரி செய்து கொண்டிருந்தபோது நாமும் அவர்களுடன் இருந்தோம். அப்பொழுது அந்தக் கழுதை அவர்களைக் கவிழ்த்து விட்டது. அவ்விடத்தில் ஐந்து அல்லது ஆறு கப்ருகள் இருந்தன.

“இங்கு அடக்கம் செய்யப் பட்டுள்ளவர்களை அறிந்தவர்கள் உங்களில் எவரேனும் உண்டா?” என்று நபியவர்கள் கேட்டார்கள். ‘ஆம்’ என்று ஒரு நபித் தோழர் பதிலளித்தார். “இவர்கள் எப்பொழுது இறந்தார்கள்?” என்று நபியவர்கள் மீண்டும் கேட்டார்கள். (அறியாமைக் காலத்தில்) ஷிர்க்கில் இருந்தபோது இறந்தார்கள் என்று அவர் பதிலளித்தார்.

தொடர்ந்து நபியவர்கள் “இங்கு அடக்கம் செய்யப் பட்டிருப்போர் வேதனை செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். உங்களுடைய உறவினர்களை இங்கு அடக்கம் செய்யாதீர்கள். கப்ருடைய வேதனைகளை நான் செவியுறக் கூடியவாறு நீங்கள் செவியுறாமல் இருக்க அல்லாஹ்விடம் பிரார்த்திக்கிறேன் என்பதாகக் கூறி விட்டு, எங்களை நோக்கி “நரகின் வேதனையிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடிக்கொள்ளுங்கள்” என்று கூறினார்கள். அதற்கு “நாங்கள் நரகின் வேதனையிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறோம்” என்று கூறினோம்.

“கப்ருடைய வேதனையிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடிக் கொள்ளுங்கள்” என்றும் கூறினார்கள். “கப்ருடைய வேதனையிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறோம்” என்று கூறினோம்.

(தொடர்ந்து நபியவர்கள்) “வெளிப்படையானதும் அந்தரங்கமானதுமான பித்னாக் (சோதனை)களிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடிக் கொள்ளுங்கள்” என்று கூறினார்கள். “வெளிப்படையானதும் அந்தரங்கமானதுமான பித்னாக்களிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறோம்” என்று கூறினோம்.

மேலும் நபியவர்கள் “தஜ்ஜாலுடைய பித்னாவிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடிக் கொள்ளுங்கள்” என்று கூறினார்கள். “தஜ்ஜாலுடைய பித்னாவிலிருந்து அல்லாஹ் விடம் பாதுகாவல் தேடுகிறோம்” என்று கூறினோம்.

நூல் : முஸ்லிம்

நபி (ஸல்) அவர்கள் இங்கு நான்கு வகையான பிரார்த்தனைகளைத் தோழர்களுக்குக் கற்றுக் கொடுத்துள் ளார்கள். அவற்றுள் கப்ருடைய வேதனையிலிருந்து பாதுகாவல் தேடக் கற்றுக் கொடுத்ததும் ஒன்றாகும். கப்ருடைய வேதனை பற்றி நபியவர்களுக்கு அல்லாஹ்விடமிருந்து அறிவிப்பு வந்ததைக் கொண்டு தான், அவர்கள் சொன்னார்கள் என்பதற்குப் பல சான்றுகளைக் காணலாம்.

சிரிப்பைக் குறைத்து அழுகையை அதிகப்படுத்துங்கள்

ஆயிஷா (ரலி) அவர்களுக்குப் பணிவிடை செய்யக்கூடிய ஒரு யூதப் பெண் இருந்தாள். அவளுக்கு ஆயிஷா(ரலி) ஏதேனும் ஒரு நற்கருமத்தைப் புரிந்தால் “அல்லாஹ் உம்மை கப்ருடைய வேதனையிலிருந்து காப்பானாக” என்று கூறுவாள்.

நபி (ஸல்) அவர்கள் எனது வீட்டினுள் பிரவேசித்த போது “மறுமை நாளைக்கு முன்னதாக கப்ரில் வேதனை உண்டா?” என்று கேட்டேன். ‘இல்லை’ என்று நபியவர்கள் பதில் சொல்லி விட்டு “அவ்வாறு நீ ஏன் கேட்கிறாய்?” என்று என்னிடம் கேட்டார்கள்.

அதற்கு நான், என்னிடம் பணிவிடை செய்யக் கூடிய பெண்ணுக்கு நற்கருமம் ஏதேனுமொன்றை நான் செய்தால் “அல்லாஹ் உம்மைக் கப்ருடைய வேதனையிலிருந்து காப்பானாக எனக் கூறுவாள்” என்று சொன்னேன். “அவள் பொய்யுரைத்து விட்டாள் ; யூதர்கள் அல்லாஹ்வின் மீது கற்பனையாகப் பொய் கூறுபவர்களே! மறுமை நாளைக்கு முன்னால் வேதனை எதுவுமில்லை” என்று கூறினார்கள்.

பின்னர் சில நாட்கள் கழிந்தன. ஒரு தினம் நடுப்பகலில் நபியவர்கள் தமது ஆடைகளை அழுத்திப் பிடித்தவர்களாக இரு கண்களும் சிவந்தவர்களாக, தனது சப்தத்தை உயர்த்திக் கொண்டு, “மக்களே! காரிருள் போன்ற பித்னாக்களில் நீங்கள் மூழ்கி விட்டீர்கள்; மக்களே! நான் அறிகின்றவற்றை நீங்கள் அறிவீர்களென்றால் கொஞ்சமாகச் சிரிப்பீர்கள்; அதிகமாக அழுவீர்கள்; மக்களே! கப்ருடைய வேதனையிலிருந்து

அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடிக் கொள்ளுங்கள். ஏனென்றால் நிச்சயமாக கப்ருடைய வேதனை என்பது உண்மையானதாகும்” என்று கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஆயிஷா (ரலி)
நூல் : அஹ்மத்

இந்நிகழ்ச்சியிலிருந்து முக்கியமானதொரு படிப்பினை யைப் பெறுகிறோம். இவ்வுலகிலுள்ளோர் எவரும் சுயமாக பர்ஸக் (கப்ர்) வாழ்க்கையை அறிய முடியாது. அந்த வகையில் நபியவர்களுக்கும் அல்லாஹ் வஹீ மூலம் அது பற்றி அறிவித்துக் கொடுக்கும் வரை அதை அறியாதிருந்தார்கள்.

முன்னைய வேதமான தவுராத்திலிருந்ததைக் கொண்டு அறியப்பட்ட கப்ர் வேதனை பற்றி யூதப்பெண்மணி ஆயிஷா (ரலி) விடம் கூறியதைப் பற்றி அவர்கள் நபியவர்களிடம் விளக்கம் கேட்டபோதுகூட தமக்கு அது பற்றி எதுவும் அதுவரை அறிவிக்கப்படாதிருந்ததால் அன்னார் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. பின்னர் அல்லாஹ் அறிவித்துக் கொடுத்தான். அதன் பின் அதை ஏற்றுக் கொண்டார்கள்.

இதிலிருந்து நாம் பெறக்கூடிய முக்கியமானதொரு படிப்பினை என்னவெனில் எவரேனும் குர்ஆனையோ ஹதீஸையோ மேற்கோள் காட்டாமல் கப்ர் நிகழ்ச்சிகள் பற்றி எதையாவது சொல்வாரென்றால் அது வெறும் உலரல், கற்பனை, என்ற முடிவுக்கே வரவேண்டியுள்ளது.

பர்ஸக் வாழ்வு பற்றி அல்லாஹ்வுடைய அறிவிப்பு வருவதற்கு முன்னால் நபியவர்களாலேயே அது பற்றி எதுவும் சுயமாக கூற முடியவில்லையென்றால், நல்லதாகவோ கெட்டதாகவோ கப்ருடைய நிகழ்ச்சிகளைத் தாம் கண்டதாக

எவரேனும் கூறினால் அதை ஏற்றுக் கொள்ள முடியுமா? வஹியின் துணையின்றி காண முடியாத இக்காட்சிகளை வஹி அருளப்படாதவர்கள் கண்டார்கள் என்று கூறப்பட்டால் அது பொய்யானது என்பதை நிரூபிக்க சான்றெதுவும் தேவையா?

கப்ரில் நடைபெறுகின்ற வேதனைகள் பலதரப்பட்டவை களாக உண்டு. அவை மறுமை நாள் வரை இருந்து கொண்டே இருக்கும். அவற்றுள் சிலவற்றை எச்சரிக்கைக்காக நமது மரணத்துக்கு முன்னாலேயே நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் சொல்லி விட்டார்கள். அந்தத் தொடரில் பின்வருமாறு அமைகின்ற வேதனை ஒன்று கப்ரில் வைக்கப் பட்ட நாள் முதல் நடைபெற்றுக் கொண்டே இருக்கும்.

நிராகரிப்பவனுடைய (கப்ரில்) தலைப் பக்கமாக ஒரு பாம்பும் கால் பக்கமாக ஒரு பாம்பும் சாட்டப்படும். அவை மறுமை நாள் வரை அந்தப் பாவியைத் தீண்டிக் கொண்டே இருக்கும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஆயிஷா (ரலி)
நூல் : அஹ்மத்

கப்ர் என்பது மரணத்தை அடுத்துள்ள பல தங்குமிடங்களில் முதலாவது தங்குமிடமாகும். எவனுக்கு அவ்விடம் இலேசாகி விட்டதோ, அவனுக்கு அதற்குப் பின்னாலுள்ள எல்லா நிலைகளும் இலேசாகிவிடும். எவனுக்கு அவ்விடம் கஷ்டமாக அமைகின்றதோ, அவனுக்கு அதனை அடுத்துள்ள எல்லா நிலைகளும் கஷ்டமாகவே அமைந்து விடும்.

உத்மான் (ரலி) அவர்களிடம் மறுமையைப் பற்றிச் சொல்லும்போது அச்சம் கொள்வதைவிட, கப்ர் பற்றி சொல்லும் போது அதிகமாக அச்சம் கொள்பவராயிருந்தார்கள்.

உத்மான் (ரலி) அவர்கள் கப்ருக்கு அருகில் நின்றால் அவர்களுடைய தாடி (மயிர்) நனைகின்றளவு அழுவார்கள். "சுவர்க்கம் நரகம் பற்றிச் சொல்லும் போது அழுவதைவிடக் கப்ரு பற்றி சொல்லும் போது அதிகமாக அழுகின்றீர்களே!" என்று அவர்களிடம் கேட்கப் பட்டது.

அதற்கவர்கள், "கப்ரு என்பது மறுமையின் தங்குமிடங்களில் முதலாவது இடமாகும். அதிலிருந்து ஒருவன் மீட்சி பெறுவானென்றால் அதற்குப் பின்னாலுள்ள அனைத்தும் இலகுவாகி விடும். அதிலிருந்து அவன் மீட்சி பெறவில்லையென்றால் அதற்குப் பின்னாலுள்ள அனைத்தும் அவனுக்குக் கடினமாகிவிடும்" என்றும் "கப்ருடைய காட்சிகளை விட மிக மிக மோசமான எந்த ஒரு காட்சியையும் நான் கண்டதில்லை" என நபி (ஸல்) அவர்கள் கூறக் கேட்டிருக்கிறேன். எனவே கப்ர் பற்றி சொல்லும்போது அதிகமதிகம் அழுகிறேன்" என்றும் கூறினார்கள்.

நூல்கள் : திர்மிதி, இப்னுமாஜா

யார் புத்திஜீவி?

கப்ருடைய வேதனையில் எவரும் சந்தேகம் கொள்ள முடியாதளவிற்கு அது பற்றி மிகத் தெளிவாகவே நபி (ஸல்) அவர்கள் கூறிவிட்டார்கள். நெருக்கடியற்ற கப்ருடைய வாழ்வில் ஆசை வைக்கிற ஒருவன் இம்மை வாழ்வை சரியாக அமைத்துக் கொள்ள வேண்டும். எந்த வாழ்வை அல்லாஹ்வும் அவனுடைய ரஸுலும் விரும்புகிறார்களோ அந்த வாழ்வை அமைத்துக் கொள்வதே ஒரு புத்திஜீவியின் நோக்கமாக இருக்க வேண்டும்.

"எவன் தன்னைத் தானே கேள்வி கேட்டு (விசாரணை

செய்து) கொண்டு மரணத்துக்குப் பின்னாலுள்ள தனது வாழ்வுக்காக இவ்வுலக வாழ்வை அமைத்துக் கொள்கிறானோ, அவனே புத்திசாலியாவான்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : ஷத்தாத் இப்னு அவ்ஸ் (ரலி)
நூல்கள் : அஹ்மத், திர்மிதி, இப்னு மாஜா

இந்த நபி மொழியை அடிப்படையாகக் கொண்டு உமர் (ரலி) அவர்கள்பின்வருமாறு கூறினார்கள்.

"நீங்கள் (கப்ரிலும் மறுமையிலும்) விசாரணை செய்யப்படுவதற்கு முன்னால் உங்களை நீங்களே விசாரணை செய்து கொள்ளுங்கள். ஒரு பொது விசாரணைக்காக நீங்கள் நிறுத்தப் படுவதற்கு முன்னால் உங்களை நீங்கள் தயார் படுத்திக் கொள்ளுங்கள். எவன் இம்மையில் தன்னைத் தானே கேள்வி கேட்டுக் கொள்கிறானோ, அவனுக்கே மறுமை விசாரணை இலகுவாக அமையும்".

நூல் : திர்மிதி

ஒருவன் தனது நண்பனிடத்தில் அவனுடைய, உணவு, உடை, பானம், ஏனைய தேவைகள் போன்றவற்றைப் பற்றி கேள்வி கேட்பது போலவே தனது வாழ்வைப் பற்றியும் தன்னைத் தானே கேள்வி கேட்டுக் கொள்ளவேண்டும். "தனது கடந்த காலம் எவ்வாறு இருந்தது? நிகழ் காலம் எவ்வாறு இருக்கிறது? எதிர் காலம் எவ்வாறு அமையப் போகிறது?" என்பன பற்றியெல்லாம் தனக்குத் தானே கேள்வி கேட்டுக் கொள்வது எவ்வளவு தூரம் பயனளிக்கும் என்பதை அறிவுள்ளவன் அறிவான்.

இவ்வாறு வாழ்வை அமைத்துக் கொள்ளவேண்டிய

மனிதன் தப்புத் தவறுகளில் ஈடுபடுகிறான். அவன் வாழ்க்கையில் செய்கின்ற தப்புத் தவறுகளை உணர்ந்து வருந்தி அல்லாஹ்விடத்தில் பாவ மன்னிப்புத் தேட அல்லாஹ் பல சந்தர்ப்பங்களை வழங்குகிறான். அவ்வாறான அனைத்து சந்தர்ப்பங்களையும் அலட்சியம் செய்து விட்டு, மரணத் தறுவாயில் புலம்புவதில் என்ன பயன் தான் உண்டு? அல்லாஹ் வழங்குகின்ற சந்தர்ப்பங்கள் பற்றி அல்குர்ஆன் கூறுவதாவது :

وَلَوْ يُؤَاخِذُ اللّٰهُ النَّاسَ بِمَا كَسَبُوْا مَا تَرَكَ عَلٰى ظَهْرِهَا مِنْ
دَابَّةٍ وَلٰكِنْ يُؤَخِّرُهُمْ اِلٰى اَجَلٍ مُّسَمًّى فَاِذَا جَاءَ اَجَلُهُمْ فَاِنَّ
اللّٰهَ كَانَ بِعِبَادِهٖ بَصِيْرًا.

“மனிதர்களை அவர்கள் தேடிக் கொண்ட (தீ) வினைக்காக (உடனுக்குடன்) அல்லாஹ் தண்டிப்பதாக இருந்தால் பூமியில் யாதொரு (மனித) ஜீவனையும் விட்டு வைக்க மாட்டான். ஆயினும் அவர்களைக் குறிப்பிட்ட தவணை வரையிலும் விட்டு வைக்கிறான். அவர்களுடைய தவணை வரும் பட்சத்தில் (உடனே அவர்களைப் பிடித்துக் கொள்வான்) நிச்சயமாக அல்லாஹ் தன் அடியார்களை உற்று நோக்கியவனாகவே இருக்கிறான்.”

திருக்குர்ஆன் 35 :45

வாழ்க்கையில் நல்ல பல வாய்ப்புக்களைத் தவற விட்டவன் தனது தவறை மரண வேளையின் போது மனதார உணர்ந்து ஒப்புக் கொள்கிறான். அந்த ஒப்புதலைக் கொண்டு

அவன் என்ன பயனைத் தான் அடைவான். இது பயனற்ற ஒரு புலம்பல் என அல்லாஹ்கூறிவிட்டான்.

ஆகவே அல்லாஹ் மறுமை வாழ்க்கைக்காக வழங்கியுள்ள தங்குமிடமான தற்காலிகமான- நிரந்தரமற்ற- அற்பமான- இவ்வுலக வாழ்க்கையைச் சதமென்றெண்ணி இன்பமான கப்ருடைய வாழ்க்கையையும் மறுமை வாழ்க்கையையும் பாழாக்கிக் கொள்வதிலிருந்து அல்லாஹ் நம்மைக் காப்பானாக!

وَآخِرُ دَعْوٰنَا اَنِ الْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ.